***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No. 106/2024 – P.W. 2 (LW-2)***

| | |
|---|---|
| *Name* | அழகிரி |
| *Father/Husband's Name* | பொன்னுசாமி |
| *Village* | மன்னார்குடி |
| *Age* | *53* |

**எதிரி ஆஜர். இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 17.09.2025*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். இறந்துபோன கார்த்திகேயனை எனக்கு தெரியாது. ஆனால் விபத்து என் வீட்டு வாசல் முன்பாக நடந்தது. நான் இறந்தவரை பார்த்துள்ளேன். கடந்த 23.07.2023-ம் தேதி இரவு 9.00 மணியளவில் நான் எனது வீட்டிலிருந்தபோது, மன்னார்குடியிலிருந்து திருத்துறைப்பூண்டி செல்லும் பாதையில் என் வீட்டு முன்பாக வைக்கோல் கட்டு ஏற்றி வந்த லாரி நின்றுக்கொண்டிருந்தது. அந்த லாரியின் பதிவு எண் எனக்கு தெரியாது.

2. பின்னால் அதே திசையில் வந்துக்கொண்டிருந்த இருசக்கர வாகனம் லாரியின் பின்பக்கம் மோதி அம்மா என்று சத்தம் வந்தது. நான் சென்று பார்த்தபோது, அவர் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார். பின்னர் இறந்தவரின் போனை எடுத்து அவரது வீட்டிலுள்ளவரிடம் தகவல் சொன்னேன். அந்த லாரியினுடைய ஓட்டுனரின் பெயர் மற்றும் இறந்தவரின் பெயர் எனக்கு தெரியாது. உடனே சம்பவயிடத்தில் கூட்டம் கூடிவிட்டது. அங்கிருந்த நபர்களில் யாரோ 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி அந்த ஆம்புலன்ஸில் இறந்த நபரை அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் தற்போது முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அம்மா என்ற சத்தம் கேட்ட பிறகு தான் நான் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். அப்போது அவர் அடிபட்டு கிடந்தார். என் வீட்டு வாசலில் தான் விபத்து நடந்தது என்றால் சரிதான். மேற்கண்ட விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். விபத்து நடந்த சமயத்தில் நான் வீட்டில் தான் இருந்தேன்.

2. மன்னார்குடியிலிருந்து என் வீட்டிற்கு வந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதே போல் லாரி ரோட்டின் ஓரம் நிறுத்தப்பட்டிருந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் வீட்டிற்கு அருகே விபத்து நடந்ததாக நான் சாட்சியாக உள்ளேன் என்றால் சரிதான்.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 17.09.2025

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.